# வேறு மாநிலங்களுக்குச் செல்லும் தொழில் முதலீடுகள்

**மு.க. ஸ்டாலின் குற்றச்சாட்டு**



சென்னை வானகரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திமுகவில் மாற்றுக் கட்சியிலிருந்து இணையும் விழாவில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலினுக்கு வாள் வழங்கிய முன்னாள் அமைச்சர் பெஞ்சமின். உடன், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் காரப்பாக்கம் கணபதி, முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியம், டி.ஆர்.பாலு எம்.பி., திமுக முதன்மைச் செயலர் கே.என்.நேரு, முன்னாள் அமைச்சர் சா.மு.நாசர் உள்ளிட்டோர்.

**சென்னை, ஜூன் 28:** தமிழகத்துக்கு வர வேண்டிய தொழில் முதலீடுகள் வேறு மாநிலங்களுக்குச் செல்கின்றன என்று திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.க.ஸ்டாலின் குற்றஞ்சாட்டினார்.

அதிமுக முன்னாள் அமைச்சர் பெஞ்சமின் அந்தக் கட்சியில் இருந்து விலகி திமுகவில் அண்மையில் இணைந்தார். இதையடுத்து, அவரது ஆதரவாளர்கள் திமுகவில் இணையும் நிகழ்ச்சி மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சென்னை வானகரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

தேர்தல் முடிந்தால் வெற்றி பெற்ற கட்சிக்குச் செல்வதை கடந்த காலங்களில் கண்டுள்ளோம். ஆனால், திமுக மீதுள்ள நம்பிக்கையில் எதிர்க்கட்சியாக உள்ளபோதும், கூட்டம் கூட்டமாக மாற்றுக் கட்சியினர் வந்து இணைகின்றனர். திமுக வலிமையாக இருந்தால்தான், தமிழகத்தைக் காப்பாற்ற முடியும் என்று நம்புகின்றனர். அந்த நம்பிக்கையை ஒருபோதும் திமுக சிதைக்காது.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழகம் இதுவரை கண்டிராத வளர்ச்சியை எட்டியது. திமுக ஆட்சியில் இந்திய அளவில் பொருளாதாரத்தில் இரண்டாவது மாநிலமாக தமிழகம் உயர்ந்தது. தினமும் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டது. திமுக ஆட்சி மீதான நம்பிக்கையால்தான் உலக அளவிலான நிறுவனங்கள் இங்கே தொழில்களைத் தொடங்கின.

தற்போது, ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ளது. புதிய அரசு பொறுப்பேற்ற ஒரு மாதத்துக்குள்ளேயே தமிழகத்தின் நிலை படுகுழிக்குள் சென்றுவிட்டது. தொழில்நிறுவனங்கள் புதிய ஆட்சியை நம்பி முதலீடு செய்யத் தயங்குகின்றன. அதனால், தொழில் முதலீடுகள் வேறு மாநிலங்களுக்குச் செல்கின்றன.

மற்றொருபுறம் தொடர் மின்வெட்டு, விவசாயிகள் போராட்டம், சட்டம் - ஒழுங்கு சீர்கேடு, பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் என்று பிரச்னைகளை அடுக்கிக் கொண்ட செல்லலாம். ஆனால், எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஆட்சியாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். அவர்களை நம்பி வாக்களித்தவர்களும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

**எந்த நேரத்திலும் தேர்தல் வரலாம்:** இந்த இக்கட்டான சூழலில் மக்களுக்குத் துணையாக திமுக இருக்கும். மற்ற கட்சிகளைவிட தமிழகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு திமுகவுக்கு அதிகம் உள்ளது. தோல்வியைக் கண்டு திமுக அஞ்சுவது இல்லை. காலை உணவுத் திட்டம் தொடங்கி திமுக அரசு கொண்டு வந்த திட்டங்கள் இருக்கும் வரையிலும் மு.க.ஸ்டாலினின் பெயர் இருக்கும்.

தற்போது அமைந்துள்ள அரசு பெரும்பான்மையோடு ஆட்சி அமைக்கவில்லை. தேர்தல் நேரத்தில் நம்மோடு இருந்த கட்சிகளின் ஆதரவில்தான் அவர்கள் ஆட்சி அமைத்துள்ளனர். எந்த நேரத்திலும் தேர்தல் வரலாம். அது மூன்று மாதங்களிலும் இருக்கலாம்; ஆறு மாதங்களிலும் இருக்கலாம். எதற்கும் திமுகவினர் தயாராக இருக்க வேண்டும் என்றார்.

## உதவிப் பேராசிரியர் தேர்வு முறைகேடுகள் குறித்து உரிய விசாரணை தேவை



**சென்னை, ஜூன் 28:** அரசுக் கல்லூரி உதவிப் பேராசிரியர் தேர்வில் முறைகேடு நடைபெற்றதாகஎழும்புகார் குறித்து உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் என அதிமுக பொதுச் செயலர் கே. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலியாக உள்ள 2,708 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்காக கடந்த திமுக ஆட்சியில் தேர்வு நடத்தப்பட்டது. இத்தேர்வில் மொத்தம் 42,064 தேர்வர்கள் பங்கேற்றனர். எழுத்துத் தேர்வு முடிவுகளை ஆசிரியர் தேர்வு வாரியம் கடந்த 25-ஆம் தேதி வெளியிட்டது.

அதில், விளக்கக் கட்டுரைகளின் மதிப்பீட்டில் பெரும் அளவிலான முறைகேடுகள் நடந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. 100 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற ஒரு தேர்வர், விளக்கமுறை வினாத்தாளில் எப்படி பூஜ்ஜியம் மதிப்பெண் பெற முடியும்? மதிப்பெண்கள் சீரற்ற முறையில் வழங்கப்பட்டுள்ளன என்பதை இது காட்டுகிறது. படித்த இளைஞர்களின் எதிர்காலத்துடன் ஆசிரியர் தேர்வு வாரியம் விளையாடுகிறது.

விளக்கத் தாளுக்காகப் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு அளவுகோல்கள், மாதிரி விடைகள் மற்றும் மதிப்பெண் வழங்கும் முறை ஆகியவற்றை ஆசிரியர் தேர்வு வாரியம் பகிரங்கமாக வெளியிட வேண்டும். வெளிப்படையான மறுமதிப்பீடு நடத்தப்பட வேண்டும் என்று தேர்வர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, இது குறித்து சுதந்திரமான முழு விசாரணை நடத்தப்பட்டு, தவறு இழைத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். விசாரணை முடியும் வரை தேர்வு நடவடிக்கைகளை நிறுத்திவைக்க வேண்டும் என அதில் தெரிவித்துள்ளார்.

## மதிமுக முன்னாள் நிர்வாகிகள் திமுகவில் இணைந்தனர்

**சென்னை, ஜூன் 28:** மதிமுகவைச் சேர்ந்த முன்னாள் மாநில, மாவட்ட நிர்வாகிகள் உள்பட 150-க்கும் மேற்பட்டோர் திமுகவில் ஞாயிற்றுக்கிழமை இணைந்தனர்.

மதிமுக முன்னாள் நிர்வாகிகளான சிவகங்கை மாவட்டச் செயலர் செ.செவந்தியப்பன், திருவள்ளூர் மாவட்டச் செயலர் டி.ஆர்.ஆர். செங்குட்டுவன், கொள்கை பரப்புச் செயலர் பொடா அழகுசுந்தரம், விருதுநகர் மாவட்டச் செயலர் ஆர்.எம்.எஸ்.சேகர், மாநிலத் தேர்தல் பணி துணைச் செயலர் விடுதலைவேந்தன், தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர் டி.ஆர்.ஆர்.மதியழகன் உள்ளிட்ட 150-க்கும் மேற்பட்டோர் அந்தக் கட்சியில் இருந்து விலகி திமுகவில் அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை இணைந்தனர்.

திமுகவுடனான கூட்டணியை முறித்துக்கொள்வதாக மதிமுக பொதுச் செயலர் வைகோ சனிக்கிழமை அறிவித்தார். இந்த நிலையில், அந்தக் கட்சியைச் சேர்ந்த மூத்த நிர்வாகிகள் திமுகவில் இணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அரசு மரியாதையுடன் இயக்குநர் கே.பாக்யராஜ் உடல் தகனம்





சென்னை பெசன்ட் நகர் மின் மயானத்தில் தகனம் செய்வதற்காக ஞாயிற்றுக்கிழமை இறுதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட இயக்குநர் கே.பாக்யராஜின் உடல். (வலது) கே.பாக்யராஜின் உடலுக்கு துப்பாக்கி குண்டுகள் முழங்க அளிக்கப்பட்ட அரசு மரியாதை.

**சென்னை, ஜூன் 28:** சென்னையில் மறைந்த இயக்குநர் கே.பாக்யராஜின் உடல் ஞாயிற்றுக்கிழமை தகனம் செய்யப்பட்டது.

இயக்குநரும் நடிகருமான கே.பாக்யராஜ் மாரடைப்பால் சென்னையில் சனிக்கிழமை காலமானார். அவரது உடலுக்கு முதல்வர் விஜய், திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள், ரஜினிகாந்த், கமல்ஹாசன் எம்.பி. உள்ளிட்ட திரையுலகினர் அஞ்சலி செலுத்தினர். சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள வீட்டிலிருந்து ஞாயிற்றுக்கிழமை காலை பாக்யராஜின் இறுதி ஊர்வலம் தொடங்கியது. வழிநெடுகிலும் பொதுமக்கள் பாக்யராஜின் உடலுக்கு மலர்களை தூவி இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இறுதி ஊர்வல வாகனத்தில் மனைவி பூர்ணிமா, மகன் சாந்தனு ஆகியோர் இருந்தனர். பெசன்ட் நகர் மின் மயானத்தில் 72 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் பாக்யராஜ் உடலுக்கு இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

அவரின் இறுதி சடங்கில் தமிழக அமைச்சர்கள் ஆனந்த், ராஜ்மோகன் ஆகியோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். பாக்யராஜின் உடலுக்கு அவரது மகன் சாந்தனு இறுதி சடங்குகளை செய்தார். அதன் பின்னர் பெசன்ட் நகர் மின் மயானத்தில் பாக்யராஜின் உடல் தகனம் செய்யப்பட்டது.

## தவெக சார்பில் ஜூலை 1-இல் தோழமைக் கட்சிகள் கூட்டம்

**தொல்.திருமாவளவனுக்கு அழைப்பு**

**சென்னை, ஜூன் 28:** தவெக சார்பில் தோழமைக் கட்சிகள் ஆலோசனைக் கூட்டம் வரும் ஜூலை 1-ஆம் தேதி சென்னையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பங்கேற்க விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவனுக்கு ஞாயிற்றுக்கிழமை அழைப்பு விடுக்கப்பட்டது.

சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த தவெக, திமுக கூட்டணியில் இருந்த காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள், விசிக , ஐயூஎம்எல் ஆதரவோடு ஆட்சியமைத்தது. தவெக தலைவர் சி.ஜோசப் விஜய் முதல்வராகப் பதவியேற்றார்.

தொடக்கத்தில் இடதுசாரிகள், இந்திய யூனியன் முஸ்லிம்லீக் (ஐயூஎம்எல்), விசிக ஆகிய கட்சிகள் திமுக கூட்டணியில் தொடர்வதாகவும், குடியரசுத் தலைவர் ஆட்சி அமைவதைத் தடுக்கவே தவெகவுக்கு ஆதரவு அளித்ததாகவும் தெரிவித்தன.

பின்னர், ஐயூஎம்எல் திமுக கூட்டணியில் இருந்து விலகி தவெக கூட்டணியில் இணைவதாக அந்தக் கட்சியின் தேசியத் தலைவர் கே.எம்.காதர் மொகிதீன் அண்மையில் அறிவித்தார். அதேபோல், மதிமுகவும் திமுக கூட்டணியிலிருந்து விலகியதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலர் வைகோ சனிக்கிழமை அறிவித்தார்.

இந்த சூழலில், தவெக சார்பில் முதல்வர் சி.ஜோசப் விஜய் தலைமையில் தோழமைக் கட்சிகள் ஆலோசனைக் கூட்டம் சென்னை மீனம்பாக்கத்தில் வரும் ஜூலை 1-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தவெக கூட்டணியில் இணைந்த கட்சிகள் மற்றும் தவெக ஆட்சி அமைக்க ஆதரவு தெரிவித்த கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இதற்காக தவெக சார்பில் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, நீர்வளத் துறை அமைச்சர் என். ஆனந்த், விளையாட்டு மேம்பாட்டு மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா ஆகியோர் சென்னை மீனம்பாக்கத்தில் விசிக தலைவர் தொல்.திருமாவளவனை ஞாயிற்றுக்கிழமை நேரில் சந்தித்து கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தனர்.

தொடர்ந்து, அடுத்தடுத்த கட்சிகளின் தலைவர்களுக்கும் நேரில் சென்று அழைப்பு விடுக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தக் கூட்டத்தில், தவெக கூட்டணி குறித்தும், அதற்கான பெயர் குறித்தும் ஆலோசிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## காலமானார்

## மருத்துவர் சத்தியசுந்தரி (92)



**கோபி/சென்னை, ஜூன் 28:** ஈரோடு மாவட்டம், கோபி அருகே உள்ள கொளந்தபாளையம் பகுதியைச் சேர்ந்த மருத்துவரும் சமூக சேவகியுமான சத்தியசுந்தரி (92) **(படம்)** உடல்நலக் குறைவு காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

இவர் பொதுமக்களுக்கு மருத்துவம் மூலம் பல்வேறு உதவிகளைச் செய்தவர். பவானி நதி நீர் கூட்டமைப்பின் தலைவர், இந்திய மருத்துவ சங்கத்தின் கோபி கிளை உறுப்பினர் உள்பட பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார்.

1992 முதல் 1995 வரையிலான காலகட்டத்தில் பவானி ஆற்றில் தனியார் ஆலைக் கழிவுகள் கலப்பதைக் கண்டித்து மிகப்பெரிய அளவில் மக்களைத் திரட்டி போராட்டம் நடத்தியவர். இதுதவிர, வறட்சிப் பகுதியான நம்பியூரில் நிலத்தடி நீர்மட்டம் உயர பல்வேறு குளங்களைத் தூர்வார முழு முயற்சி மேற்கொண்டவர்.

இவரது மறைவுக்கு பொதுமக்கள், தொழிலதிபர்கள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள், மருத்துவர்கள் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**மு.க.ஸ்டாலின் இரங்கல்:** 'பசுமைப் போராளியும், சிறந்த மகப்பேறு மருத்துவருமான சத்தியசுந்தரியின் மறைவு அதிர்ச்சி அளிக்கிறது. பவானி ஆற்றைப் பாழாக்கிய தனியார் ஆலைக்கு எதிராக, பலவித மிரட்டல்களுக்கு அஞ்சாமல் மக்களைத் திரட்டி அவர் நடத்திய சட்டப்போராட்டமும்,களப்போராட்டமும் என்றும் மக்களால் நினைவுகூரப்படும். சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த சத்தியசுந்தரியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்' என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தில்லி சிறப்புப் பிரதிநிதி நியமனம்: மறுபரிசீலனை கோரும் இந்திய கம்யூனிஸ்ட்



**சென்னை, ஜூன் 28:** தமிழக அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி நியமனத்தை முதல்வர் ஜோசப் விஜய் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை: தமிழக அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதியாக கர்நாடக அரசியல் செல்வாக்குடன் பெங்களூரை மையமாகக் கொண்டு தொழில் நடத்திவரும் கே.வெங்கட நாராயணா நியமனம் செய்யப்பட்டது விமர்சனத்துக்குள்ளாகி வருகிறது.

தமிழக அரசியல், பொருளாதார, சமூக நிலைகள் பற்றிய புரிதலும், கலை, இலக்கியம், பண்பாட்டு துறைகள் குறித்த புரிதலும் இல்லாத ஒருவர், தமிழக அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதியாக இருப்பதை மக்கள் ஏற்க மாட்டார்கள். அவரது நியமனத்தை தமிழக முதல்வர் மறுபரிசீலனை செய்து, பொருத்தமான பிரதிநிதியை நியமனம் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**CHANGE OF NAME**

I, Given Name: RASIYA TABASUM
Surname : ABDUL RABANI
(Old Name) D/o. Abdul Rabani,
date of birth: 12.11.2001,
residing at Door No.20,
Ramaswamy Muthaliyar Street,
Vasanthapuram, Vellore, Vellore Taluk,
Vellore District, Tamil Nadu - 632001.
shall henceforth be known as
Given Name: RASIYA THABUSAM
Surname : ABDUL RABANI
(New Name)

Vellore, 27.06.2026 — Given Name: Rasiya Tabasum, Surname: Abdul Rabani

**ஆவின் — கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,**

செல் எண் : 8148838237 — கிருஷ்ணகிரி — இ-மெயில் : aavindpi@gmail.com

ந.க.எண். 5252/Mkg.2/2025 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள் : 24.06.2026

கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் ஒசூர் மற்றும் கிருஷ்ணகிரி நகரம் மற்றும் புற நகர பகுதிகளில் பால் விநியோகம் செய்ய 08 வாகனங்கள் மற்றும் விற்பனை அபிவிருத்திக்காக 5 பேர் (4+1) பயணிக்கும் கார் ஒன்றும் இயக்கிட இரு பகுதி (Two part system) அடிப்படையில் அத்தாட்சி பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 2026-27-ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி தொடர்பான இதர விவரங்கள் மற்றும் டெண்டர் படிவங்கள் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி பற்றிய விளக்க கூட்ட நாள் **08.07.2026, காலை 11.00 மணி.** நிறைவு செய்யப்பட்ட இரு பகுதி ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் Online மூலம் பெறப்பட வேண்டிய கடைசி நாள் **16.07.2026 மாலை 03.00 மணி வரை** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பகுதி 1 மட்டும் (தொழில்நுட்ப பிரிவு மட்டும்) ஒப்பந்த குழு அலுவலர்கள் முன்னிலையில் **17.07.2026 அன்று மாலை 3.45 மணி** அளவில் திறக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்த படிவங்கள் மற்றும் டேவணித்தொகை https://tntenders.gov.in என்ற நிர்ணயிக்கப்பட்ட வலைதள முகவரியில் குறிப்பிட்ட தேதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளவோ/ தள்ளி வைக்கவோ/ பிரித்து அளிக்கவோ / ரத்து செய்யவோ பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

பொது மேலாளர்,

செ.ம.தொ.இ./2148/ஒப்பந்தப்புள்ளி/2026 — கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,



**CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL**
(An Autonomous Institute, Ministry of Education, Govt.of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai-600100.

**RECRUITMENT NOTIFICATION FOR ASSOCIATE PROFESSOR**
NOTIFICATION No.03/CICT/Professor/2026-2027

Date: 28.06.2026

**Central Institute of Classical Tamil, Chennai (CICT)** invites applications from Indian Nationals, who fulfill the prescribed qualification, experience, age and other conditions as per the UGC Regulations for filling up the following posts sanctioned on regular basis, as per the details given below:-

| S.No. | Name of the Post | Academic Level | No. of Post | Category | Method of Recruitment |
|---|---|---|---|---|---|
| 1. | Associate Professor | Level 13A of 7th CPC as per UGC | 06 | UR-5 OBC-1 | Direct |

The details of the posts, educational qualification, age, experience and application format are available in the Institute's website **www.cict.in.** Applications complete in all aspects along with requisite application fee and all necessary documents should reach within 60 days of publication of this advertisement to "The Registrar, Central Institute of Classical Tamil, Chemmozhi Salai, Perumbakkam, Chennai-600100".

Sd/-
**Registrar**



**தினமணி**

**தேவை**

எமது நிறுவனத்தின் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, தருமபுரி, விழுப்புரம், நாகப்பட்டினம், புது தில்லி ஆகிய பதிப்புகளில் பணிபுரிய கீழ்க்கண்ட நிலைகளில் தகுதியுள்ள நபர்கள் தேவை.

**உதவி ஆசிரியர்கள் (SUB - EDITORS) :**
- பட்டதாரி
- 35 வயதுக்கு உட்பட்டவர்
- ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு நன்கு மொழிபெயர்த்தல்
- நல்ல தமிழ் நடையில் எழுதுதல்
- பொது அறிவுத் திறன்

**நிருபர்கள் (REPORTERS) :**
- பட்டதாரி
- 35 வயதுக்கு உட்பட்டவர்
- ஆங்கிலத்தில் உரையாடுதல்
- தமிழில் பிழையின்றி எழுதுதல்
- தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் வரும் 7 நாள்களுக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பங்களை அனுப்பலாம்.

**E-mail : editordinamani@gmail.com**



**MANAPPURAM FINANCE LTD.**
CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House,
P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

**தங்க நகைகள் பொது ஏலம்**

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்க்கண்ட கிளைகளில் 16.07.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

ராணிப்பேட்டை, பழைய பஸ் ஸ்டாண்டு சர்க்கிள், 0128720730008075, 8164, வாலாஜாப்பேட்டை, 0101910700757678, திருவண்ணாமலை, செய்யாறு, 0116980730007493, காந்தி ரோடு ஆரணி, 0104700700039445, 0104700730008665, நாட்ராம்பள்ளி, 0124270700063351, வாணியம்பாடி மார்கெட், 0122650700024715, 4799, வேலூர், தாராபடவேடு, 0127870730007231, சந்தைப்பேட்டை பஜார், 0124020730016396, செங்குட்டை காட்பாடி, 0121880730015367,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வுள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக



**சுந்தரம் மியூச்சுவல்** — சுந்தரம் பைனான்ஸ் குரூப்

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் ('ஃபண்ட்') திட்டங்களுக்கான திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கியத் தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவல் அறிக்கை (SAI) ஆகியவற்றிற்கான அறிவிப்பு மற்றும் இணைப்பு

**புதிய வாடிக்கையாளர் பராமரிப்பு மையம் திறப்பு:**

KFIN Technologies Limited-இன் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள வாடிக்கையாளர் சேவை மையங்களின் முகவரிகளை முதலீட்டாளர்கள் / யூனிட் வைத்திருப்பவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; இம்மையங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளிலிருந்து செயல்படத் தொடங்கும். சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் (Sundaram Mutual Fund) திட்டங்களுக்கான முதலீட்டாளர்களின் பரிவர்த்தனைகளை ஏற்கும் அதிகாரப்பூர்வ மையங்களாக இந்த வாடிக்கையாளர் சேவை மையங்கள் செயல்படும்.

| கிளை | முகவரி | திறக்கும் நாள் |
|---|---|---|
| உடுப்பி | **Kfin Technologies Limited** சஹேல் கட்டிடம், 9-3-39C, மீன் சந்தை அருகில், பிபிசி (PPC) சாலைக்கு எதிரில், சிட்பாடி, உடுப்பி - 576101, கர்நாடகா. Email Id: mfsudipi@kfintech.com தொலைபேசி: +91 0820 7966169 | 29-06-2026 |
| புஜ் | **Kfin Technologies Limited** 102 FF டைம் ஸ்கொயர் ஜகானிக், அனம் ரிங் ரோடு அருகில், புஜ் - 370 001, குஜராத் Email Id: mfsbhuj@kfintech.com தொலைபேசி: +91 28324 56833 | 01-07-2026 |

திட்டத் தகவல் ஆவணம்(கள்) / முக்கிய தகவல் குறிப்பாணை(கள்) / கூடுதல் தகவல் அறிக்கையின் மற்ற அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும்.

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கியத் தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவல் அறிக்கை (SAI) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்தப் இணைப்பு அவ்வப்போது திருத்தப்படுகிறது.

இடம்: சென்னை
தேதி: ஜூன் 29, 2026

சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்ளையன்ஸ் அதிகாரி

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்: சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட் (சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்) CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம்: 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014. தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாடு) www.sundarammutual.com

பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.